# DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of criminal procedure)

IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE

C.C.No.123/2025

Deposition of Witness for L.W.4 / P.W.3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | குமரேசன் | | | |
| Father's Name | : | துரைக்கண்ணன் | Occupation | : | ஆட்சோட டிரைவர் |
| Village | : | அசோகப்புரம், | | | |
| District | : | ஈரோடு | Age | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **08.05.2026**

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

**முதல் விசாரணை:**

நான் ஈரோடு அசோகபுரத்தில் குடியிருந்து கொண்டு, ஆட்டோ டிரைவராக உள்ளேன். எனக்கு இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாது. தேதி, மாதம் நினைவில்லை சுமார் இரண்டு வருடம் இருக்கலாம், ஒரு நாள் காலை சுமார் 11.00 மணியளவில், நான் அசோகபுரம் சோறும் அருகில் இருந்த பொழுது, அங்கு வந்த போலீசார் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் ஒரு வெள்ளை தாளில் கையொப்பம் செய்தேன். எதற்காக அந்த கையொப்பம் என்று எனக்குத் தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. **பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை .

**(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அனுமதி கேட்டதின் பேரில் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்படுகிறார்).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

கடந்த 11.06.2024 ஆம் தேதி அன்று, இரவு சுமார் 07.00 மணி அளவில், அ.சா.1 ராதிகாவும், ஞானசம்பந்தம் என்பவரும் எனது கடைக்கு அருகில் உள்ள, கண்ணன் பெட்ரோல் பங்க் அருகில் உள்ள, நாட்ராயன் கோயில் எதிரில் வந்து கொண்டிருந்ததாகவும், அப்போது அவர்கள் இருவரையும் ஆஜர் எதிரி தான் ஓடி வந்த ஆட்டோ–வை கொண்டு அவர்களது பைக்கின் மீது மோதியதாகவும், அதில் ராதிகா கீழே விழுந்து விட்டதாகவும், அதில் ராதிகாவிற்கு வலது கால் பெருவிரலில் சிராய்ப்பு காயமும், இடது தோள்பட்டையில் மொக்கை காயமும் ஏற்பட்டதாகவும், ராதிகா சரவணனை பார்த்து ஏன் இப்படி செய்கிறாய் என்று கேட்டதற்கு, சரவணன் நீ என்னோடு பழக்கம் வைத்து விட்டு, ஞானசம்பந்தத்துடன் எதற்கு பழகுகிறாா் எனக் கூறி, தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், பின்னர் கையால் ராதிகாவை அடித்ததாகவும், அவருக்கு கொலை மிரட்டல் விடுத்ததாகவும், பக்கத்தில் இருந்த மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்ததாகவும், அருகில் சென்று பார்த்த பொழுது சரவணன் அங்கிருந்து தப்பி சென்று விட்டதாகவும், பின்னர் அன்றைய தினம் இரவு சுமார் 10.00 மணியளவில் சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் என் முன்னிலையில் சம்பவ இடத்தில் விசாரணை செய்து சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜரும், மாதிரி வரைபடமும் தயார் செய்ததாகவும், அந்த பார்வை மகஜரில் நான் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரி நண்பர் என்பதால், எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சிய் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

J.M. A.M.C.